# அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி

கொடைக்கானல் - 624 101

**தமிழ்த்துறை குறிஞ்சி மன்றம்**

மற்றும்

**கவிமுகி**


பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்

Kavimugi International Journal of
Tamil Research is a Peer reviewed Printed Journal

**ISSN 2950-6611**


## பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்விதழ்

# சங்ககால முதல் சமகாலம் வரை இலக்கியத்தில் நோக்கும் போக்கும்

**30 அக்டோபர் 2023**


பதிப்பாசிரியர்

முனைவர் **ர.மங்கையர்க்கரசி**



**அடிப்புற அரங்கச் செயற்பாட்டுப் பேரவை**

இலங்கை.



Scanned with ACE Scanner

கருத்தரங்க அமைப்பு குழுத் தலைவர்
**ஜா.ஸ்.ஏஞ்சலின்** எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எச்.டி
முதல்வர்
அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி
கொடைக்கானல்

ஒருங்கிணைப்பாளர்
முனைவர் **ர.மங்கையர்க்கரசி**
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி
கொடைக்கானல்

ஆலோசனை குழுத் தலைவர்
திருமதி. **க.வெண்ணிலா**
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி
கொடைக்கானல்

ஒருங்கிணைப்பு குழு
திருமதி. **வா.போதுமணி**
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி
கொடைக்கானல்

முனைவர் **சு.உமாதேவி**
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி
கொடைக்கானல்

முனைவர் **ப.காந்திமதி**
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
அரசு மகளிர் கலை அறிவியல் கல்லூரி
கொடைக்கானல்

முனைவர். **வெ.முத்துலட்சுமி**
முதன்மை ஆசிரியர்
கவிமுகி பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ், இலங்கை

Scanned with ACE Scanner

75. புறப்பாடல்களில் வெளிப்படும் சங்கப்புலவர்களின் உளவியல் நுட்பமும், புலப்பாட்டுத் திறனும் 271
முனைவர் பி. திவ்யா

76. குலசேகராழ்வார் பாசுரங்களில் எடுத்துரைப்பியல் 275
முனைவர் ந.செ.கி.சங்கீத்ராதா

77. டி.செல்வராஜ் நாவல்களில் வர்க்கப் போராட்டம் 279
முனைவர் சு.உமாதேவி

78. கூளமாதாரி, பூக்குழி நாவல்களின் இடம் பெறும் சமுதாய வெளிப்பாடுகள் 282
முனைவர். மு.கீதா

79. புறநானூற்றில் தோழமைப் பகிர்வு 285
முனைவர். பொ.ராணி

80. ஆகாசவீடுகள் நாவலில் சமுதாயப்பார்வை 287
செ.பவித்ரா

81. நீதி இலக்கியங்களில் மனிதப்பண்பாடுகள் 292
முனைவர் த.தமிழரசி

82. எட்டுத்தொகையில் மகளிரின் ஆளுமை வெளிப்படாத சூழல்கள் 295
முனைவர் பா.நளினிப்ரியா

83. இலக்கணங்களில் இடம்பெறும் ஆற்றுப்படை 298
முனைவர் ம.கீதா

84. பதிற்றுப்பத்தில் உயிரினங்கள் பெறும் இடம் 302
இரா கார்த்தியாயினி

85. மு.மேத்தா கவிதைகளில் அரசியல் நோக்கு 305
மு.காவ்யா

86. கூகை புதினத்தில் மனித உரிமை மீறல் சிந்தனைகள் 311
பா.கீர்த்தனா

87. புறநானூற்றில் மன்னர்களின் கொடைச்சிறப்பு 316
மா.ரேவதி

88. நெய்தல் திணையில் எற்பாடு பொழுதும் காலமும் 321
இர.கீதா

89. கல்வெட்டுகளில் காணப்படும் பண்பாட்டு விழுமியங்கள் 324
முனைவர். மு.கனிச்செல்வி

Scanned with ACE Scanner

கவிமுகி பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்
Kavimugi International Journal of Tamil Research

மலர் 2 சிறப்பிதழ் 6
ISSN 2950-6611

# புறப்பாடல்களில் வெளிப்படும் சங்கப்புலவர்களின் உளவியல் நுட்பமும், புலப்பாட்டுத் திறனும்

முனைவர் **பி. திவ்யா**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு)
பாத்திமா கல்லூரி, மதுரை.

மனிதர் உள்ளவற்றையும், தான் உணர்ந்தவற்றையும் பிறரோடு பகிர்ந்துகொள்ள மொழி ஒரு ஊடகமாக விளங்குகின்றது. **"மொழி என்பது கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளப் பய்படும் கருவி."** 1 என்கிறார் முனைவர் த. பரசுராமன். இந்த மொழியைப் பயன்படுத்தி வெளியிடும் கருத்துக்கள் பரவலாக்கம் பெற காலம் கடந்தும் நின்று நிலைக்க நினைக்கும் கலைஞன் அதனை இலக்கியமாக வார்க்கிறான். **"ஒருவன் தன் மனக்கருத்தை மற்றவக்குப் புலப்படுத்த மொழியைக் கருவியாக்குகிறான்."** 2 என்கிறார் ஒரு ஆய்வாளர்.

**"ஒரு கலைஞன் தான் கடந்து வந்த வாழ்வில் கண்டு கேட்டு அனுபவித்து உணர்ந்தவற்றை இலக்கியமாகப் படைக்கிறான். இதனால் தான் இலக்கியம் உயர்ந்த சிந்தனையின் இலக்கியப் பிழிவாகும்"** 3 என்றுரைக்கிறார் மு. வரதராசனார். இவ்வாறு படைக்கப்படும் இலக்கியம் வெறுமனே கருத்தை உள்ளதை உள்ளபடி மட்டுமே கூறுவதில்லை. அப்படிக் கூறினால் காலம் கடந்து பரவலாக்கம் பெற இயலாது. அதிலும் குறிப்பாக **ஒரு கரு கவிதையாக மாறும் போது அது பல்வேறு நுணுக்கமான வேலைப்பாடுகளோடு உருவாகிறது. "கவிதையைப் பற்றிக் கூறும் அரிஸ்டாட்டில் இது புனைந்துரை என்றே கூறுவார். உண்மையை அவ்வாறே கூறுவது கவிதையின் பணியன்று. அது வரலாறு போன்றவற்றின் பணி.''** 4 என அரிஸ்டாட்டிலை மேற்கோள் காட்டும் ஆய்வாளர் ஒருவரின் கருத்து இங்கு கவனிக்கத்தக்கது. மேற்குறித்தவற்றை நோக்க இலக்கியம், அதிலும் குறிப்பாக கவிதை இலக்கியம், தான் கூறவரும் உயரிய சிந்தனையை வெளிப்படுத்த பல புலப்பாட்டு உத்திகளைக் கையாளும். துங்ஙனம் கையாளும் கவிதையே காலம் கடந்து நிலைக்கும்.

காதல், வீரம், அறம் போன்ற உயரய கருத்துகளைத் தம் கால வரலாற்றை அதன்வழி வெளிப்படும் வாழ்வியலை ஈராயிரம் ஆண்டு கடந்தும் நமக்குக் கற்பிக்கும் செவ்விலக்கியங்களே சங்க இலக்கியங்கள். துன்பையும், அகவாழ்வின் நுணுக்கங்களையும் அகப்பாடல்கள் பாட வீரம், கொடை, அறம் போன்றவற்றையும் அரசன் மற்றும் குடிமக்களின் புறவாழ்வியலையும் புறஇலக்கியங்கள் பேசுகின்றன. இப்புற இலக்கியங்களே இவ்வாய்வின் களமாகின்றன. புறவாழ்வியலைப் பேசும் சங்கப் புறஇலக்கியங்களில் புறநானூறு மற்றும் மதுரைக்காஞ்சி இரண்டும் ஆய்வு (சுருக்கம் கருதி) காலம் கடந்து வாழ்வதற்கான காரணமான புலப்பாட்டு உத்திகளை இவ்வாய்வு ஆராய்கிறது. அதற்கு முன்னர் அழுத்தமான புலப்பாட்டு நெறிகள் வழி சங்கப்புலவோர் எத்தகு நோக்கங்களுக்காக பாடல் இயற்றியுள்ளனர் என ஆய்தல் அவசியமாகின்றது. கவிதையின் தொழில்களைப் பட்டியலிடும் அ.ச.ஞானநம்பந்தம் இன்பமூட்டுவது அதன் முதன்மைத் தொழில் எனவும், **''மனப்பண்பை மாற்றம் செய்தல், உணர்ச்சிபூட்டுதல், தளர்ச்சியடைந்த மனதிற்கு ஊக்கமளித்தல் முதலான தொழில்களைச் செய்வதும் பாடல்களின் இரண்டாவதான தொழில்களாம்"** 5 என்கிறார். மேலும், **"கவிதை எப்போதும் நாடகத் தன்மையில் உள்ளது".** 6 எனவும் அரிஸ்டாட்டில் குறிக்கிறார். மேலும் அ.ச. ஞானசம்பந்தம் அவர்கள் **"மக்களின் அறியாமையைப் போக்கி அறிவுக்கொழுத்தல் முதலா வேலைகளைச் செய்ய வேண்டுவதும் பாடல்களின் வேலையே"** 7 என்கிறார். மேற்குறித்த அறிஞர்களின் கருத்துக்களை நோக்க,

1. இன்பமூட்டல் 2. மனப்பண்பை மாற்றல்
3. உணர்ச்சிபூட்டல் 4.தளர்ச்சியடைந்த மனதிற்கு ஊக்கமளித்தல் 5.அறிவுக் கொழுத்துதல்

போன்ற ஐந்தும் இலக்கியம் தொழிற்படுதற்கான நோக்கங்களாகும். இவ்வைந்துமே சங்கப் புலவர்களின் நோக்கமாயும் உள்ளது. இத்தகு உயரிய நோக்கங்களோடு கவிபாடும் சங்கப் புலவர்கள் அந்நோக்கம் நிறைவேறும் வகையில் தம் கருத்தை அழுத்தமாகப் புலப்படுத்த பல புலப்பாட்டு நெறிகளைக் கையாளுகின்றனர். புலப்பாட்டு நெறி என்பது கூறவரும் கருத்தை வாசகனுக்குத் தகுந்த வகையில் கொண்டு சேர்க்க கவிஞன் கையாளும் உத்தியே ஆகும். **"புலப்பாட்டு நெறி என்பது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் கேட்போரின் மனதில் பேசுவோன் தன் கருத்தைப் பதிய வைக்கும் முயற்சியைக் கண்டறியும் நெறியாகும்."** 9 இந்தப் புலப்பாட்டுக் கலை தொடக்கக் காலத்தில் பேச்சுக் கலை சார்ந்து மட்டுமே எண்ணப்பட்டது. ஆதனால் புலப்பாட்டுக் கலை "பேச்சுக் கலை ஆசிரியன் எனப் பொருள்படும் கிரேக்கச் சொல்லிலிருந்துப் பிறந்துள்ளது. ஆனால் இது எழுத்திலக்கியத்திற்கும் பொருந்துவதே ஆகும். ஒரு குறிப்பிட்ட அறிஞரின் மொழி ஆளுமைத் திறமையையும், **கலைபயில் தெளிவையும், பட்டறிவையும், தனித்திறனையும் அவர் கருத்துக்களைப் புலப்படுத்தும் உத்தி முறைகளால் உணரலாம்"** 10 இத்தகுப் புலப்பாட்டு நெறி குறித்த முதல் உரையாடலை தொடங்கியவர்கள் கிரேக்கர்களே ஆவர். இவ்வெண்ணத்தை முதலில் விதைத்தவர்களாக தத்துவவியலாளர்களான பிளேட்டோ, அரிஸ்டாட்டிலை குறிக்கலாம். அரிஸ்டாட்டில் ஒரு நூலை எழுதினார். இவரைத் தொடர்ந்து உரேஜூம் நாட்டைச் சேர்ந்தவர்களான



Scanned with ACE Scanner

டயோனிசியஸ், ஹெர்மோஜெனிஸ், எப்தோனியஸ், லாஞ்ஜியஸ் போன்றோரும் இங்கிலாந்து நாட்டவரான லியனார்ட் காக்ஸ், தாமஸ்வில்கர் போன்ற பலரும் நெறி குறித்த விவாதத்தை முன்னெடுத்தனர். இதன்வழி ஒரு பேச்சுக்கலை அல்லது எழுத்துக்கலையின் புலப்பாட்டு நெறிகளைத் தேடி ஆய்வுத்தளம் விரிந்தது. **"விளக்கம் தருதல், ஒப்பீடு செய்தல், தொடர்புப்படுத்திப் பார்த்தல், சூழமைவு நோக்கல், சான்றாதாரம் காட்டல் ஆகியக் கூறுகள் ஒருவர் பேச்சில் இருக்கவேண்டும் என்று விளக்குகிறார் அரிஸ்டாட்டில்." 11.** இது பேச்சிற்கான உத்தியாக அரிஸ்டாட்டில் குறிப்பினும், இலக்கியத்திற்கும் பொருந்துவதாகவே உள்ளன. இவற்றை வெளிப்படுத்த சில புலப்பாட்டு உத்திகளையும் கையாளுகின்றனர் சங்கப் புலவர்கள். அவை வருமாறு,

1. விளக்கம் தருதல்
2. ஒப்பீடு செய்தல்
3. சான்றாதாரம் காட்டல்
4. சூழமைவு நோக்கல்
5. சூழல் உருவாக்கல்
6. நாடகப்பாங்கு
7. குறிப்பால் உணர்த்துதல்
8. காரணங்கள் அடுக்கிச் சுட்டல்

போன்றவை இலக்கியத்திற்கான புலப்பாட்டு நெறிகளாக அமைகின்றன. சங்கப் புறப்பாக்களை உற்று நோக்களில் இந்தப் புலப்பாட்டு நெறிகள் சங்கப் புலவர்களால் கையாளப்பட்டுள்ளமை புலனாகின்றது. அவற்றில் சிலவற்றை இவ்வாய்வில் நோக்கலாம்.

**ஒப்பீடு செய்தல்**

ஒன்றன் சிறப்பை அல்லது தாழ்வை விளக்க அதனோடு ஒத்த பிறவற்றை ஒப்பிட்டு இரண்டிற்குமான முரணை விளக்குதல் என்பது அதனைத் தெளிவாய் உணரச் செய்யும். இதனை நன்குணர்ந்த சங்கப் புலவர்கள் தாம் கூறவரும் பொருளை விளக்க ஒப்பீடு செய்தலை ஒரு உத்தியாக புலப்பாட்டு நெறியாகக் கையாளுகின்றனர். மதுரைக்காஞ்சியில் போர்மீது பெருவிருப்பு கொண்ட நெடுஞ்செழியனுக்குப் போரின் தீமையை, புகழின் நிலையாமையை உணர்த்த விளைந்த மாங்குடி மருதனார் நெடுஞ்செழியனின் முன்னோர்களோடு அவரை ஒப்பிடுகின்றார்.

**"பகற் செய்யும் செஞ்ஞாயிறும்**
**இரவுச் செய்யும் வெண் திங்களும்**
**மைதீர்ந்து கிளர்ந்து விளங்க**
**மழைத்தொழில் உதவ மாதிரங் கொழுக்க"** (மதுரைக்காஞ்சி *7 - 10)*

என்னும் வரிகளில் முன்னோர் ஆட்சியில் ஞாயிறும் திங்களும் மயக்கமின்றி ஒளிர, மழைப் பொழிந்து மாநிலம் கொழுத்துள்ளதாகக் கூறுகிறார். அவ்வாறு கூறியதைத் தொடர்ந்துத

**"வினைக் கவின்ற பேர் யானை**
**சினஞ் சிறந்து களனுழக்கவும்**
**மா வெடுத்த மலிகுரூவுத் துகள்**
**அகல் வானத்து வெயில் கரப்பவும்"** (மதுரைக்காஞ்சி *47 - 50)*

எனச் செழியனின் யானை எதிரிப் படைகளை ஓடச் செய்ய அதனால் எழும் புழுதி சூரியனைத அதன் ஒளியை மறைத்ததாகக் கூறுகிறார். அதாவது நிலந்தரு நெடியோனையும் நெடுஞ்செழியனையும் ஒப்பிடும் புலவர் நெடியோன் ஆட்சியில் சூரிய ஒளி மயக்கமின்றி கிடைத்தமையையும், செழியன் ஆட்சியில் ஒளி மறைக்கப்பட்டமையையும் எடுத்துரைத்து, இருவருக்கும் இடையில் உள்ள முரணைச் சுட்டிக்காட்டுகிறார்.

நிலந்தருத் திருவின் நெடியோன் போரை நிகழ்த்திய பின் அவன் செய்த செயலையும் நெடுஞ்செழியன் தன் பகைவருக்கு செய்தனவற்றையும் ஒப்பிடும் புலவர்த

**"சுரம் போழ்ந்த இகலாற்றல்**
**உயர்ந் தோங்கிய வழுச் சிறப்பின்**
**நிலந் தந்த பேருதவி"** (மதுரைக்காஞ்சி *58 - 60)*

என்னும் வரிகளில் நெடியோன் போரில் தோற்றவர்களுக்கு அவர்களின் நிலத்தைத் திரும்பித் தந்து செய்த, நிலந்தந்த பேருதவியையும்,

**"நாடு கெட எரிபரப்பி**
**ஆழங் காணத் தஞ்சுவர விறுத்து**
**அரசு பட அமரு ழக்கி**
**முரசு கொண்டு களம் வேட்ட**
**அடு திறலுயர் புகழ் வேண்ட"** (மதுரைக் காஞ்சி *126 - 130)*

என்னும் வரிகளின் வழி நெடுஞ்செழியன் படைநாட்டை எரித்து அழித்தமையையும் ஒப்பிட்டு நெடுஞ்செழியனின் பிழையை மறைமுகமாக உணர்த்துகிறார்.

காரணங்களை அடுக்கிச் சுட்டல் :

ஒரு புலவர் தாம் கூற வரும் செய்தியை நேரிடையாகக் கூறுவதில் ஏற்படும் தாக்கத்தை விட மறைமுகமாக உணர்த்துவதே அதிகத் தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே ஒன்றை உணர்த்த பல காரணங்களையும் பட்டியலிட்டு உரைப்பர். மதுரைக்காஞ்சியில் நெடுஞ்செழியிடம் போர் வேண்டாம் என்பதைச் சொல்ல, படிப்படியாகக் காரணங்களைச் சுட்டுகிறார் மாங்குடி மருதனார். கல்வியின் சிறப்பைக் கூறவரும் பொன்முடியார் ஏன் கற்க வேண்டும் என்னும் காரணங்களாக,

கவிமுகி பன்னாட்டுத் தமிழ் ஆய்விதழ்
Kavimugi International Journal of Tamil Research

1. கற்றவர் பால் தாயின் மனம் திரியும்
2. மூத்தவனிருக்க கற்ற இளையவன் வழியில் அரசு நடக்கும்
3. மேற்பால் எக் குறிக்கப்படும் வர்ணாசிரமப்படி உயர்ந்தவரும் கீழ்ப்படுத்தப்பட்டவனின் பேச்சைக் கேட்டு நடப்பான்.

எனப்பட்டியலிட்டு, இவை அனைத்தும் நடைபெற கற்க வேண்டும் என உணர்த்துகிறார்.

**"காய்நெல்லறுத்துக் கவளம் கொளி....."** என்னும் பாடலில் வரியைக் கூடுதலாக விதிக்கக்கூடாது எக் கூறும் புலவர் அதற்கான காரணம் என்வென்பதை உவமை வழி விளக்குகிறார்.

**சூழமைவு நோக்கல்**

சங்கப் புலவர் தாம் கவிபாட கிடைக்கும் சரியான வாய்ப்புக்காக காத்திருந்து பொருத்தமான சூழல் அமைகையில் தன் உட்கிடக்கையை பாடுபவர்களாகவும் விளங்கியுள்ளனர். சாத்தந்தையார், போரில் வென்ற மன்னனைப் போற்றும் பாடல் பாட வாய்ப்பினைப் பெற்றுள்ளார். வெற்றிக்களிப்பில் மன்னன் இருக்கையில் அவனைப் புகழ்ந்து பாடும் வாய்ப்பைப் பயன்படுத்தி நாட்டின் உண்மை நிலையை எடுத்துரைக்க முனைகிறார் புலவர். எனவே,

**"ஊர் கொள வந்தப் பொருநனோடு**
**ஆர்புனைத் தெரியல் தான் மலைந்த போரே"** *(புறம் - 188)*

எனப்பாடும் புலவர், மன்னனின் விரைவைச் சுட்டும் உவமையாக,

**"சாறு தலைக் கொண்டென, பெண்ணீற்று உற்றெ**
**பட்டமாரி ஞான்ற ஞாயிற்றுக்**
**கட்டில் நிணக்கும் இழிசினன் கையது**
**போழ்தூண்டு ஊசியின் விரைந்தன்று"** *(புறம் - 188)*

என்பதைச் சுட்டுகிறார். அதாவது மன்னனின் போர் விரைவைத் தாம் உற்று நோக்கிய சாமானியின் தொழில் திறனோடு ஒப்பிட்டு உரைக்கும் புலவர் அன்றன்றைக்கான தேவைக்காக கடினப்படும் சூழலில்தான் அவன் நாட்டு மக்கள் உள்ளனர் என்பதை மறைமுகமாக உணர்த்துகிறார். **"சிறந்த கவிஞர் ஒரு செயலை காணுவானாயின் ஏனையோர் காணும் காட்சிக்கும், அவன் காணும் காட்சிக்கும் வேற்றுமை உண்டு. பொருளின் உட்கருத்தைக் காணக்கூடிய வன்மை அவனிடம் உண்டு. காண்பதோடில்லை கண்ட பேருண்மைகளைப் பிறர்க் காணுமாறு காட்டும் அரிய ஆற்றலும் அவன்பாலுண்டு." 12** மக்கள் வாழ்க்கையையும் நீண்டகாலம் அப்படி புலவர் கண்டறிந்தவற்றைத் தக்க சூழலில் எடுத்துரைத்து மன்னனுக்கு நிலையை உணர்த்துகிறார் புலவர்.

**சூழல் உருவாக்கல்**

தகுந்த சூழலில் தம் உள்ளக் கருத்தை எடுத்துரைக்கும் புலவர், அத்தகு சூழல் வாய்க்கவில்லை என்றாலும் இருக்கும் சூழலைத் தமக்குத் தக்கதாக மாற்றி பாடல் உரைத்து உள்ளனர். மதுரைக்காஞ்சியில் பாண்டிய நெடுஞ்செழியனின் போர் உணர்வு மிகுதலைக் கடியக் கருதும் புலவர் அதை நேரடியாகக் கூறாமல் அதற்கான தகுந்த சூழலை உருவாக்குகின்றார். மன்னர் தான் கூறுவதை விரும்பிக் கேட்கும் வகையில் மன்னனின் முன்னோர் குறித்த புகழ்ந்துரைகளோடு தொடங்குகிறார் புலவர்.

**"உலகம் ஆண்ட உயர்ந்தோர் மருக"** *(மதுரைக்காஞ்சி - 23)*
**"வரைத்தாழ் அருவிப் பொருப்பிற் பெருந"** *(மதுரைக்காஞ்சி - 42)*
**"பொலந்தார் மார்பின் னெடியோன் உம்பல்"** *(மதுரைக்காஞ்சி - 61)*
**"சீர்சான்ற உயர் நெல்லின்**
**ஊர் கொண்ட உயர் கொற்றவ"** *(மதுரைக்காஞ்சி - 87, 88)*

எனப் பலவாறு நெடுஞ்செழியனைப் புகழ்ந்து மகிழ்ந்து கேட்கும் மனநிலை நோக்கி அவரை நகர்த்துகின்றார். அப்படி அவர் கேட்கும் சூழலை உருவாக்கி, மன்னனின் அன்பிற்கும், மதிப்பிற்கும் உரியவராக தன்னை மாற்றிய பின்னர் தான் கூறவிரும்பும் போர் மறுப்புக் கருத்துக்களையும், நிலையாமையையும் எடுத்துரைக்கின்றார்.

மதுரை மாநகர் குறித்து விவாஜிக்கும் மருதனார் அதில் பொதுமகளிர் குறித்தும் இடித்துரைப்பார்.

**"பழுந்தேர் வாழ்க்கைப் பறவை போலக்**
**கொழுந்துடி செல்வரும் பிறரு மேஎய"** *(மதுரைக்காஞ்சி - 576, 577)*

என அவர்கள் பழுமரம் தேடும் பறவை போல செல்வத்தைத் தேடுவோர் என்று கூறிவிட்டு பின் குடும்பத்தில் உள்ள பெண்களின் செயல்பாடுகளை எடுத்துரைக்கிறார். இந்த முரணைச் சுட்டும் மருதனார் இறுதிப் பகுதியில் பல பெண்களுடன் மன்னன் துயில் கொள்ளும் நிலையைக் கூறி, பல மகளிர் தரும் மதுவை அருந்தி மகிழ்ந்துரைய வாழ்த்தும் வரியில் மன்னன் பொது மகளிரை நீங்கி வாழ வேண்டும் என்பதை உணர்த்துகிறார். இப்படி தான் கூற வருவதை மன்னர் கவனிக்கும் சூழலைத் தாமே உருவாக்கி, அதன்பின் மன்னன் மனம் கொள்ளத் தக்க வகையில் பாடியுள்ளார் மாங்குடி மருதனார்.

இப்படிப்பட்ட எழுத்தாளுமையை உணர்ந்ததாலேதான் புறநானூற்றில் வஞ்சினம் உரைக்கும் பாண்டிய நெடுஞ்செழியன்,

**"ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி**



Scanned with ACE Scanner